05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# MASALAH SOSIAL DALAM SAJAK MODEN TAMIL MALAYSIA
# மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்

SARASWATHY A/P
KUTHIRAKKAL KUNHIKANNAN
சரஸ்வதி குதிரக்கல் குஞ்சுக்கண்ணன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT MEMPEROLEH
IJAZAH DOKTOR FALSAFAH (KESUSASTERAAN TAMIL)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
மொழியியல் தொடர்பாடல் புலம் சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம்
2017

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# MASALAH SOSIAL DALAM SAJAK MODEN TAMIL MALAYSIA

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti, menganalisis tujuan penggunaan dan mengkaji gaya penulisan isu-isu sosial yang dipaparkan dalam sajak moden Tamil Malaysia. Sejumlah tujuh puluh tiga antologi sajak moden yang dihasilkan dari tahun 1979 - 2010 dipilih sebagai bahan kajian. Kaedah kualitatif iaitu kajian perpustakaan dan analisis teks serta teori sosiologi perspektif functionalis digunakan. Pola perbincangan kajian ini tertumpu kepada masalah sosial, ekonomi dan pendidikan. Dapatan kajian menunjukkan daripada sembilan puluh tiga buah sajak moden yang dikaji, lima puluh lima buah sajak moden menggambarkan isu-isu sosial, enam belas buah sajak moden menggambarkan isu-isu ekonomi dan dua puluh dua buah sajak moden menggambarkan isu-isu pendidikan. Sajak-sajak moden ini dihasilkan bagi tujuan memberi pengajaran, meluahkan perasaan tidak puas hati, mencerminkan pergolakan hidup serta memberi kesedaran dan amaran. Para penyajak menggunakan teknik simile, imej, metafora, paradoks, simbol, mitos, kekaburan dan sindiran untuk memaparkan isu-isu sosial dalam sajak moden Tamil Malaysia. Sajak-sajak moden yang dikaji boleh dijadikan teladan, panduan dan refleksi dalam menyelesaikan masalah sosial yang dihadapi oleh masyarakat India di Malaysia.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**Social Problems in Modern Tamil Poems in Malaysia**

## ABSTRACT

This study aims to identify the social issues, to analyze the purpose of handling the social issues and assess the intended use of the writing style of the social issues featured in modern Tamil poems in Malaysia. A total of seventy three anthology of modern poems produced from 1979 to 2010 were selected as research materials. The researcher has used the qualitative method including library research and has used the theory of sociology - functionalist perspective. Data were analyzed based on social, economical and educational themes. The results showed, out of ninety three poems studied, fifty five poems focus on social related issues, sixteen poems on economical related issues and twenty two poems on educational related issues. These modern poems were written for the purpose of teaching, expressing dissatisfaction, reflecting the turbulence of life and to create awareness and warning. The poet had used techniques such as similies, images, metaphors, paradoxes, symbols, myth, obscurity and satire to display the social issues in their poems. These poems were written to set example, guide and reflect in solving social problems faced by the Indian community in Malaysia.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**பொருளடக்கம்**

| | | பக்கம் |
|---|---|---|
| ஆய்வாளர் உறுதிமொழி | | ii |
| நன்றியுரை | | iii |
| சமர்ப்பணம் | | iv |
| ஆய்வுச் சுருக்கம் | | v |
| ஆய்வின் சுருக்கம் (மலாய்மொழி) | | vi |
| ஆய்வின் சுருக்கம் (ஆங்கிலமொழி) | | vii |
| பொருளடக்கம் | | viii |
| அட்டவணைப் பட்டியல் | | ix |
| குறிவரைவுப் பட்டியல் | | x |
| **இயல் 1 அறிமுகம்** | | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வின் பின்னணி | 2 |
| 1.2.1 | இலக்கிய வரலாறு | 6 |
| 1.2.2 | புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் | 12 |
| 1.2.3 | மலேசியப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் | 16 |
| 1.2.3.1 | தொடக்கக் காலம் வானம்பாடிக்கு முந்தைய காலம் (1964 - 1976) | 17 |
| 1.2.3.2 | வானம்பாடி காலம் (1977-1987) | 18 |
| 1.2.3.3 | வானம்பாடிக்குப் பிந்தையக் காலம் (1988-1998) | 21 |
| 1.2.3.4 | மறுமலர்ச்சி காலம் | 22 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 25 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 29 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 1.5 | ஆய்வு வினா | 29 |
| 1.6 | ஆய்வு முக்கியத்துவம் | 30 |
| 1.7 | ஆய்வு எல்லை | 32 |
| 1.8 | ஆய்வு மூலங்கள் | 35 |
| 1.9 | கலைச்சொல் விளக்கம் | 35 |
| 1.9.1 | புதுக்கவிதை | 35 |
| 1.9.2 | சமுதாயச் சிக்கல் | 36 |
| 1.9.3 | உத்திமுறை | 37 |
| 1.10 | முடிவு | 38 |

**இயல் 2 முந்தைய ஆய்வு**

| | | |
|---|---|---|
| 2.1 | முன்னுரை | 39 |
| 2.2 | முந்தைய ஆய்வுகள் | 39 |
| 2.3 | முடிவுரை | 57 |

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

| | | |
|---|---|---|
| 3.1 | முன்னுரை | 59 |
| 3.2 | ஆய்வு வடிவமைப்பு | 60 |
| 3.3 | ஆய்வு கட்டமைப்பு | 61 |
| 3.4 | ஆய்வு அணுகுமுறை | 62 |
| 3.4.1 | நூலக ஆய்வு | 62 |
| 3.5 | தகவல் சேகரிப்பு முறை | 63 |
| 3.5.1 | தரவுகளை வாசித்தல் | 64 |
| 3.5.2 | தரவுகளைத் தெரிவு செய்தல் | 64 |
| 3.5.3 | தரவுகளைப் பகுத்தாய்தல் | 64 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 3.6 | ஆய்வுக் கோட்பாடு | 65 |
| 3.7 | கோட்பாடு கட்டமைப்பு | 73 |
| 3.8 | முடிவுரை | 74 |

**இயல் 4 ஆய்வின் முடிவுகளும் விவாதங்களும்**

| | | |
|---|---|---|
| 4.1 | முன்னுரை | 75 |
| 4.2 | சமுதாயத் தொடர்பான சிக்கல்கள் | 76 |
| 4.2.1 | மதுப்பழக்கம் | 76 |
| 4.2.2 | விபச்சாரம் | 105 |
| 4.2.3 | குடியுரிமை | 138 |
| 4.2.4 | வன்முறை | 157 |
| 4.2.5 | சிறார்வதை | 177 |
| 4.2.6 | பாலியல் வன்முறை | 203 |
| 4.2.7 | பெண் கொடுமை | 220 |
| 4.3 | பொருளாதாரம் தொடர்பான சிக்கல் | 239 |
| 4.3.1 | வறுமை | 241 |
| 4.3.2 | வேலையில்லாத் திண்டாட்டம் | 259 |
| 4.4 | கல்வி தொடர்பான சிக்கல் | 269 |
| 4.4.1 | மொழியுணர்வின்மை | 270 |
| 4.4.2 | தமிழ்ப்பள்ளி | 284 |
| 4.4.3 | கல்வியின் முக்கியத்துவம் | 312 |
| 4.5 | முடிவுரை | 319 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 322

5.2 கண்டுபிடிப்புகள் 523

5.3 எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரை 332

5.4 முடிவுரை 332

**மேற்கோள் நூல்கள்** 335

RINGKASAN EKSEKUTIF

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | புதுக்கவிதைகளின் தொகுப்புகள் (1979-2010) | 32 |
| 4.1 | மதுப்பழக்கம் தொடர்பான கவிதைப் பட்டியல் | 74 |
| 4.2 | விபச்சாரம் தொடர்பான கவிதைப் பட்டியல் | 105 |
| 4.3 | 1986 - 2010 எய்ட்ஸ் நோய் எண்ணிக்கையும் மரணமும் | 120 |
| 4.4 | குடியுரிமை தொடர்பான கவிதைப் பட்டியல் | 138 |
| 4.5 | இனவாரியாகச் சிவப்பு அடையாள அட்டை வைத்திருப்போர் | 150 |
| 4.6 | வன்முறை தொடர்பான கவிதைப் பட்டியல் | 156 |
| 4.7 | 2008-2013 வரையிலான வன்முறை சம்பவங்களும் எண்ணிக்கைகளும் | 165 |
| 4.8 | சிறார்வதை தொடர்பான கவிதைப் பட்டியல் | 177 |
| 4.9 | சிறார் கொடுமை விளைவிக்கும் சந்தேக நபர்களின் பட்டியல் | 189 |
| 4.10 | 2013 ஆம் ஆண்டு பதிவான சிறார் கொடுமை வழக்குப் பட்டியல் | 190 |
| 4.11 | பாலியல் வன்முறை தொடர்பான கவிதைப் பட்டியல் | 202 |
| 4.12 | பாலியல் வன்முறை வழக்குகள் 2006 - 2011 | 210 |
| 4.13 | பாலியல் வன்முறை சம்பவங்கள் 2011 | 211 |
| 4.14 | வேலையிடத்தில் பாலியல் தொந்தரவு எண்ணிக்கை | 212 |
| 4.15 | பெண் கொடுமை தொடர்பான கவிதைப் பட்டியல் | 221 |
| 4.16 | வருமை தொடர்பான கவிதைப் பட்டியல் | 238 |
| 4.17 | 2002 - 2014 வருமை சதவிகிதம் | 250 |
| 4.18 | வேலையில்லாத் திண்டாட்டம் கவிதைப் பட்டியல் | 259 |
| 4.19 | மொழியுணர்வு தொடர்பான கவிதைப் பட்டியல் | 269 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 4.20 | தமிழ்ப்பள்ளித் தொடர்பான கவிதைப் பட்டியல் | 283 |
| 4.21 | மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை | 298 |
| 4.22 | மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் செயல்திட்ட மேம்பாடு | 302 |
| 4.23 | குறைந்த இந்திய மாணவர் எண்ணிக்கை கொண்ட பள்ளிகள் | 303 |
| 4.24 | மாற்றிடங்களில் நிர்மாணிக்கப்பட்ட தமிழ்ப்பள்ளிகள் | 304 |
| 4.25 | கல்வியின் முக்கியத்துவம் | 310 |
| 4.26 | கவிதைகளின் நோக்கங்கள், உத்திமுறைகளின் எண்ணிக்கை | 317 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## வரைபடப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு கட்டமைப்பு | 59 |
| 3.2 | கோட்பாடு கட்டமைப்பு | 70 |
| 4.1 | மது அருந்துவதால் இறந்தவர் எண்ணிக்கை | 89 |
| 4.3 | இந்தியர்கள் ஆவண விண்ணப்ப பட்டியல் | 147 |
| 4.4 | மலேசியாவின் குற்றச் செயல் புள்ளி விபரம் (2003 - 2012) | 163 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

“மலேசியத் தமிழ்ப்புதுக்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்” எனும் இவ்வாய்வினில் ஆய்வாளர் ஆய்வின் பின்னணி, சிக்கல், நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வு சான்றாதாரங்கள், கலைச்சொற்கள் ஆகியவற்றை விவரிக்கவுள்ளார்.

05-4506 bupsi

இலக்கியத் துறை இன்றைய காலத்தில் துரித வளர்ச்சி அடைந்து வருகின்றது. தற்சமயம் இத்துறையானது தனக்கென தனி ஓர் இடத்தையும் சிறப்பையும் பெற்றுள்ளது. இலக்கியத்தை ஒரு சமுதாயத்தின் போக்கு, ஒரு சமுதாயத்தின் இலக்கு, ஒரு சமுதாயத்தின் இலட்சியம், ஒரு சமுதாயத்தின் நிலைக்கண்ணாடி என்றெல்லாம் குறிப்பிடலாம்.

இவ்வாய்வினில் ஆய்வாளர் 73 மலேசியத் தமிழ்ப்புதுக்கவிதைத் தொகுப்புகளைத் தன் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்துள்ளார். இவை 1979ஆம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை வெளியான புதுக்கவிதைத் தொகுப்புகளை உள்ளடக்கியவையாகும். இத்தொகுப்பினில் காணப்படும் சமுதாயச் சிக்கல் அடிப்படையிலான புதுக்கவிதைகளைத் தெரிவு செய்து அவற்றின் கருப்பொருளினை அடையாளங்கண்டு, இக்கருப்பொருளைக் கவிஞர்கள் தெரிவு செய்ததற்கான காரணங்களை ஆராய்வதோடு கவிஞர்கள் பயன்படுத்தியுள்ள உத்திமுறைகளையும் ஆய்வாளர் விவரித்துள்ளார்.

## 1.2 ஆய்வுப் பின்னணி

மு.வரதராசன், தமது ‘இலக்கியத் திறன்’ எனும் நூலில் இலக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு இயம்பியுள்ளார்.

> 'ஒரு மரத்தைப் பார்த்து, இது நாற்பதடி உயரம் என்பது அறிவியல், இது வானளாவி உயர்ந்தது என்பது கலை. விண்ணை இடிக்கும் இமயம் என்றும் கூறுவர். விண் என்ற ஒன்று கிடையாது என்றும் இமயமலை சிகரம் விண்ணை இடிப்பது இல்லை என்றும் அறிவது அறிவியல்; அதாவது உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உரைப்பது கலை. அறிவும் ஆராய்ச்சியும் அடிப்படையாக அமைவது அறிவியல். உணர்ச்சியும் கற்பனையுமாக அமைவது கலை. இக்கலை பலவகைப்படும். ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் போன்றவை கலை (வரதராசன், மு. 2011:15).

05-4506832 pustaka.upsi.edu.my ptbupsi

மனிதன் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழி. மொழி இல்லையாயின் நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம். ஆகவே, மன்பதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடிப்படையான மொழி மிகமிகச் சிறந்த நாகரிகக் கருவி எனலாம். அத்தகைய மொழியை, மொழியின் சொற்களை ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால், அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும். இலக்கியம் முழுவதும் சொற்களால் ஆனது; சில

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கலைகள் அவ்வப்போது தோன்றிப் பயனளித்து மறையக் கூடியன. ஆனால் இலக்கியம் நெடுங்காலம் வாழக்கூடியது. அதனால்தான் பழம்பெரும் இலக்கியங்கள் இன்றுவரை போற்றப்படுகின்றன (வரதராசன், மு. 2011:44).

தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று இயம்பமுடியாத அளவுக்குப் பழமையானது; பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்குரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும்,மக்கள் வாழ்க்கைநெறியின் செம்மையும் புலப்படுகின்றன (பாலசுப்பிரமணியம், சி. 2011:15).

05-4506

இலக்கியம் என்பது ஒரு நுண்கலை. ஓவியமும் சிற்பமும் கட்புலனாகக் கூடியன; இசை செவிப்புலனாக் கூடியது. அவற்றினும் நுட்பமாய்க் கருத்திற்கு மட்டுமே புலனாக கூடியது இலக்கியம். இத்தகைய நுண்ணியவற்றுள் எல்லாம் நுண்ணிதமான நுண்கலைக்கு வரலாறு எழுத முடியும் என்பது கடினமே. ஐம்புலன்களால் அறியக் கூடியவற்றை நம்மினும் பிரித்துத் தனித்துவைத்து நோக்க இடமிருக்கிறது. அதனால் அவற்றின் வரலாற்றைத் தனித்தும் சிந்திக்க வாய்ப்புண்டு. இலக்கியத்தை அங்ஙனம் பிரித்துத் தனித்து நோக்குதல் எளிதன்று. அதனால்தான் அதன் வரலாறு அதனைப் படைத்தவர்களோடும் நூல்களோடும் சேர்த்துவைத்தே நோக்கப்பட்டும் பின்னிப் பிணைத்தே எழுதப்பட்டும் வந்துள்ளது (தமிழண்ணல், 2014: 19).

bupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கு அம்சம் அல்ல. பொழுதுபோக்கிற்காக மட்டும் படைக்கப்படும் நூல்களைப் பற்றி நம் முன்னோர்கள் நினைக்கவேயில்லை. ஏதோ ஒரு குறிக்கோளுடன் படைக்கப்பட்டதுதான் இலக்கியம். இலக்கியம் எனும் சொல் பண்டைத்தமிழில் இல்லாமற் போனாலும் கூட தொல்காப்பியர் "செய்யுள்" எனும் சிறப்புப்பெயரால் சுட்டுகிறார். திருவள்ளுவரும் நூல் எனும் சொல்லை இலக்கியத்தைச் சுட்டப் பயன்படுத்தியுள்ளார்.

"நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
பண்புடையாளர் தொடர்பு" (குறள்;783)

நல்ல நூலைப் பலகால் படித்தாலும் மனதுக்குச் சலிப்பு தட்டாது. படிக்கப்படிக்க அதன் நயம் வெளிப்படும். படித்துணர்ந்த உண்மைப் பொருள்களை வாழ்க்கை அனுபவத்தோடு ஒட்டி நல்வாழ்வு வாழப் பயன்படும் என்பது வள்ளுவரின் அறக்கருத்தாகும்.

05-4506 bupsi

இலக்கியம் மனிதனைச் செம்மைப்படுத்த வேண்டும்; பண்படுத்த வேண்டும் என்பதுவே திருவள்ளுவரின் அறக்கருத்தாகும்.இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை காண்பது எளிதான செயல் அல்ல. இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி, வாழ்க்கையின் விமர்சனம், வாழ்க்கையின் அனுபவக் கருவூலம் என்றெல்லாம் விளக்க முனைபவர் பலருண்டு. இலக்கியம் என்பது புனையா ஓவியம். இலக்கியம் என்பது எழுத்து வடிவத்தில் வெளிப்படும் கலை என்றும் கூறுவர். எழுதப்பட்ட படைப்புகளின் ஒட்டு மொத்தமான தொகுப்பே இலக்கியம் என்பது மற்றுமொரு விளக்கமாகும் (ஞானசம்பந்தன், அ.ச. 1999). இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


புலப்படுத்துகிறது; அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத்துகள், உணர்ச்சிகள், தலை நோக்கங்கள் முதலியவற்றையும், சொல் வடிவிலே காட்டும் குறிப்பாகும்; ஆன்மாவின் உண்மைச் சரித்திரமாக உள்ளது அதுவே; அதன் சிறப்பு இயல்புகள் கலையழகும், குறிப்பாற்றலும், நிலைபேற்றுப் பண்புகளும் ஆகும் (வையாபுரிப்பிள்ளை, எஸ். 2009:24).

இலக்கியக் கற்றலானது ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறையை அறியப் பயன்படும். அதோடு, ஒரு காலக்கட்டத்தில் வாழும் மக்களின் பண்பாட்டைக் குறிக்கும் கருவியாகவும் அது திகழ்கின்றது. பெண் மற்றும் ஆண்களின் தன்மைகள், பிரச்சனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் இலக்கியம் இருக்கின்றது (Umar Junus, 1986).

05-4506 bupsi

இலக்கியமானது வாழ்க்கை நெறிகளை உருவாக்கும் தன்மையுடையது. இக்கூற்றினை உறுதி செய்யும் சான்றாக ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. அவ்விலக்கியம் இலக்கியவாதிகளின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே தென்படுகின்றது (Mohamad Taib Osman, 1977).

ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் முறையாகத் திட்டமிட்டும் புத்தாக்க முறையிலும் படைக்கப்படுகின்றது. இலக்கியப் படைப்புகள் மனிதர்களிடையே மறைந்திருக்கும் கற்பனை ஆற்றலை வெளிக்கொணர்கிறது. மேலும், இலக்கியப் படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு மனிதனுக்குத் தன்முனைப்பு அளித்து உயர்நிலை சிந்தனைவாதிகளாக உருமாற்றுகின்றது (Othman Putih, 1995). இலக்கியம் பல நற்பண்புகளைக் கொண்டுள்ளது. அவை இறை நம்பிக்கை, சமுதாயத் தொடர்பு,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மனநிலை, சரித்திரம், அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், கல்விக் கோட்பாடுகள் போன்றவையாகும். இலக்கியத்தில் கூறவரும் கருத்துகள் அதனை வாசிக்கும் மக்களின் மனநிலைக்கும் சிந்தனையாற்றலுக்கும் ஏற்ப வேறுபட்டிருக்கும் (Azman Wan Sik, 1981).

இலக்கியத்தின் உள்ளீடு பல வகையில் மாறுப்பட்டிருந்தாலும் அது நமக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற கருத்து ஒன்று மட்டுமே. நம்முடைய உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அது விளங்குகிறது.

### 1.2.1 இலக்கிய வரலாறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியம் தொன்மையானது. தனக்கு உரிய கலப்பற்ற தூய இலக்கிய வரலாற்றினைக் கொண்டு தொன்மையாக விளங்குகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றினைச் சங்க காலம் (கி.மு 500 - கி.பி 200), சங்க மருவிய காலம் (கி.பி 150 - 450), பல்லவர் காலம் (கி.பி 600 - 900), சோழர் காலம் (கி.பி 900 - 1300), நாயக்கர் காலம் (கி.பி 1300 - 1750), ஐரோப்பியர் காலம் (கி.பி 1750 - 1947), இக்காலம் (கி.பி 1947 - 2000) எனும் அடிப்படையில் பகுக்கலாம் (ஆனந்தன், சு. 2013).

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் 473 புலவர்களால் எழுதப்பட்டு 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பலதரப்பட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொழில் நிலையிலுள்ள பெண்களும், நாடாளும் மன்னர்களும் உண்டு. சங்க இலக்கியம் அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளை வெளிபடுத்தும் கருவியாக அமைந்தது. பண்டைத்தமிழரின் வீரம், ஆட்சியமைப்பு, போர், வணிகம், தலைவன் தலைவி காதல் உறவு போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் துல்லிதமாக எடுத்தியம்பியுள்ளன. மேலும், 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சி.வை தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்ற தமிழ் அறிஞர்கள் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சு உருப் பெற்றன. பண்டைத் தமிழகத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடித் தலை, இடை, கடை என்று மூன்று சங்கங்கள் அமைத்து, அவற்றின் வாயிலாகத் தமிழ் வளர்த்தார்கள் என்று கூறும் மரபைப் புறக்கணித்து விட முடியாது. இக்காலத் தோன்றிய இலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவற்றில் காதலும் வீரமும் பாடற் பொருளாக அமைந்தன. அவை அகம், புறம் எனும் இரு திணைகளாகப் பகுக்கப்பட்டன (வரதராசன், மு. 2011).

05-4506 bupsi

இதனை அடுத்து, சங்க மருவிய காலம் கி.பி 150 முதல் 450 வரை நீடித்தது. இக்காலத்தில் தனிப்பாடல் நிலையை மாற்றி முதன் முதலாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எனும் நூலைத் தந்தார். மணிமேகலையும் இக்காலத்தில் தான் தோன்றியது. இக்காலக் கட்டத்தில் தமிழகம் களப்பிரர்கள் கைக்கு மாறியதால், பௌத்தமும் சமணமும் வளரத் தொடங்கின. இதனால் கட்குடித்தலும், பரத்தையர் உறவும் கண்டிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் அதிகமான நீதி இலக்கியங்கள் தோன்றின. இக்காலப்பகுதியில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. அவை திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி ஆசாரக்கோவை, முதுமொழிகாஞ்சி, பழமொழி, சிறுபஞ்சமூலம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார்நாற்பது, களவழி நாற்பது ஆகியவை ஆகும். இவற்றுள் பெரும்பானவை மக்கள் வாழ வேண்டிய நெறிமுறைகளை, அறக்கருத்துகளை எடுத்துரைக்கின்றன. சங்க காலத்தில் மன்னர்களைப் பாடினர். சங்க மருவிய காலத்தில் குடிமக்களைப் பாடும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும், அறத்தை வலியுறுத்தும் நீதி நூல்களும் தோன்றின (ஆனந்தன், சு. 2013:79).

தொடர்ந்து, பல்லவர் காலம் கி.பி 600 முதல் 900 வரை தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தது. பல்லவர் காலப்பகுதியைப் 'பக்தி இலக்கியக் காலம்' அல்லது 'சைவ வைணவ காலம்' எனலாம். சைவ சமயம் தமிழ் நாட்டின் பழமையான சமயங்களுள் ஒன்றாகும். சிவபெருமானைத் தென்னாடுடைய 'சிவன்' என்று போற்றுவது மரபு. சைவப் பெரியார் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் இக்காலத்தே தோன்றி, சமய உணர்வு ஊட்டும் பக்தி பாடல்களைப் பாடினார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரப் பாடல்களைப் பாடினர். மாணிக்கவாசகர் திருவாசகத்தை அளித்து இச்சமயத்தை வளர்த்த சிவனடியார் ஆவர். இருபத்தியேழு அருளாளர்களால் பாடப்பட்டது பன்னிரு திருமுறை. இப்பல்லவர் காலக்கட்டத்தில் தான் திருமூலர் இயற்றிய திருமந்திரம் வெளியாயிற்று. இதைத் தவிர, திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய நூல்களைக் காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ளார் (பாலசுப்ரமணியம், சி. 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கி.பி 900-1300 முதல் சோழர் காலம் தொடங்கியது. இக்காலப் பகுதியைக் காப்பியக் காலம் என்பர். இச்சமயத்தில் தான் பெருங்காப்பியங்களான சீவகச் சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன தோன்றின. ஐஞ்சிறு காப்பியங்களான சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் இக்காலக்கட்டத்தில் தோன்றியவையாகும். கம்பரின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும் இக்காலத்திற்கு உட்பட்டவையேயாகும்.

இதனைத் தொடர்ந்து, நாயக்கர் காலம் கி.பி 1350-1750 வரை நீடித்தது. இக்காலப்பகுதி ‘பிரபந்த காலம்’ அல்லது ‘உரையாசிரியர் காலம்’ என்றழைக்கப்பட்டது. நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகமாகத் தோன்றின. சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் மிகுதியான கற்பனையைக் கொண்டு அமைந்தவை. சிற்றிலக்கியங்களின் பாடுபொருளாகச் சிற்றின்பமும் பேரின்பமும் அடங்கியுள்ளன. பொதுவாக இறைவன், அரசன், வள்ளல், ஆசான் ஆகியோரின் சிறப்பினை எடுத்துரைத்தலே சிற்றிலக்கியங்களின் பணி எனலாம். தமிழ் சிற்றிலக்கியங்களுள் பிள்ளைத்தமிழ், தூது, அந்தாதி, கோவை, பள்ளு, கலம்பகம், குறவஞ்சி, உலா, எனப் பல தோன்றின. புகழ் பெற்ற உரையாசிரியர்களான இளம்பூரணர், இறையனார், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், நச்சினார்க்கினியர், நக்கீரர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் இக்காலத்தில் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்தனர் (வரதராசன், மு. 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1750ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம் என வழங்கப்பட்டது. இக்காலத்தைச் சமயக் கலப்புக் காலம் அல்லது 'உரைநடைக்காலம்' என்பர். நாயக்கர் ஆட்சி நலியத் தொடங்கியதும் முகமதியர்கள் பன்முறை முயன்று தமிழக ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டனர். இவர்களால் நிலைத்த ஆட்சியை வழங்க முடியாமல் போனதால், வணிகத்தின் பொருட்டுத் தமிழகத்திற்கு வந்திருந்த ஆங்கிலேயேரும், பிரஞ்சுக்காரரும், டச்சுக்காரரும் பல இடங்களைக் கைப்பற்றியதுமின்றி இவர்களின் வருகையால் கிறிஸ்துவச் சமயமும் பரவலாயிற்று. பாதிரிமார்களும் கத்தோலிக்கக் குருமார்களும் சமயத்தை வளர்க்கத் தொடங்கியதும் கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் உதவிகள் புரிந்து, தமிழ்மொழியைப் பயின்று தமிழரோடு ஒன்றிக் கலந்து உறவாடியதால் கிறிஸ்துவச் சமயமும் தமிழ் மொழியினை வளர்க்கலாயிற்று.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்காலக் கட்டத்தில் வீரமா முனிவர், சீகன் பால்க் ஐயர், இரேனியுஸ் ஐயர், போப்பையர், கால்டுவெல் ஐயர், வேதநாயகம் பிள்ளை, எச்.ஏ.கிருஷ்ணப் பிள்ளை போன்ற அறிஞர்கள் பல நூல்களை வழங்கினர். சதுர் அகராதி, வேத உதாரணத்திரட்டு, நற்கருணைத் தியான மாலை, தாமரைத்தடாகம், பெண்மதி மாலை, பிரதாப முதலியார் சரித்திரம் போன்ற நூல்களும் வெளியீடு கண்டன (பாலசுப்ரமணியம், சி. 2014).

கி.பி 1947 - 2000 முதல் தற்காலம் தொடங்கியது. இக்காலத்தை 'மறுமலர்ச்சிக் காலம்' என்பர். இக்காலக் கட்டத்தில் தமிழ் நூற் பதிப்புக்கலை, வசன நூல்கள், சொற்பொழிவு நூல்கள், உரைநடை, கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்கம், ஆய்வரங்கம், குழந்தை இலக்கியம், பயண

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியம், நாட்டுப் புற இலக்கியம், கட்டுரை இலக்கியம், கடித இலக்கியம், தன் வரலாறு, கவிதை, சிறுகதை, புதினம் போன்ற துறைகளில் தமிழ் மொழி அளப்பரிய வளர்ச்சி கண்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடைக்குப் புதிய குருதியூட்டி எழுச்சி பெறச் செய்த பெருந்தகைகள் பலராவர். பாரதியார், பாரதிதாசன், மறைமலையடிகள், கலியாணசுந்தரனார், ப.ஜீவானந்தம், வ.உ.சிதம்பரம்பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, பேரறிஞர் அண்ணா, மு.வரதராசன், கண்ணதாசன், கு.அழகிரிசாமி, ந.பிச்சமூர்த்தி, ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன் போன்றோர் பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்று விளங்கினர் (ஆனந்தன், சு. 2013).

05-4506
இலக்கியப் படைப்பைச் சுவைப்பதன் வழி வெளிப்படையாகச் சமுதாயத் bupsi தொடர்பை வளர்த்துக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாகும். பழங்காலத்து இலக்கியப் படைப்புகள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நெறிகளைக் குறிக்கின்றது. அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிய இம்மாதிரியான இலக்கியப் படைப்புகளே சான்றுகளாக அமைகின்றன. நாவல், கவிதை, சிறுகதை, நாடகம் ஆகியவை இலக்கியப் படைப்புகளுள் சிலவாகும். புதுக்கவிதைகள் இலக்கியத்தில் ஒரு புது மலர்ச்சியைக் கொண்டு வந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில், தமிழ் இலக்கியம் பல வளர்ச்சிகளைக் கண்டது. இலக்கியவாதிகள் இலக்கியத்திற்கான மரபுகளைப் பின்பற்றாமல் பல இலக்கியங்களைப் படைத்து வந்தது இவ்வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக அமைகின்றது. சுதந்திரத்திற்கு முன்பிலிருந்தே புதுக்கவிதைகளுக்கு அதிகமான வரவேற்புகள் இருந்து வந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ் இலக்கியம் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கை திருநாட்டில் தமிழ் இலக்கியமானது 2000 ஆண்டுகளுக்கு முன்பே வளர்ச்சி காண தொடங்கிவிட்டது. ஆயினும், மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் தமிழ் இலக்கியம் 120 ஆண்டுகளுக்கு முன்பு தான் வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1957ஆம் ஆண்டு வரை மலேசியாவும் சிங்கப்பூரும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குக் கீழ் ஒன்றாக இருந்தமையால் அவ்விரு நாட்டிலும் தமிழ் இலக்கியமானது சேர்ந்தே வளர்ச்சி கண்டது. 1965ஆம் ஆண்டுக்குப் பின் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து சென்றதால் அவ்விரு நாடுகளிலும் தமிழ் இலக்கியம் பிரிவு கண்டு தனித்தனியாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

05-4506 bupsi

19ஆம் நூற்றாண்டின் இறுதி காலக்கட்டத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தமிழர்கள் மலேசியாவிற்குக் குடியேறியதன் வழி மரபுக் கவிதைகள் எழுதுவது தொடக்கம் காணப்பட்டது. இந்தியாவிலிருந்து வந்த தமிழர்கள் தோட்டப்புறங்களிலும் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள் அரசாங்கத் துறையிலும் பணிபுரிந்தனர். இவர்களின் வழியே மரபுக் கவிதைகள் உட்பட தமிழ் இலக்கியங்கள் மலேசியாவில் தொடக்கம் கண்டன (ராஜம் ராஜேந்திரன், 2007).

### 1.2.2 புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்

இலக்கியப் படைப்புகளுள் புதுக்கவிதை ஒரு புது வரவாகும். மனுக்குல வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் ஏற்பச் சமூக மாற்றங்களும் சிந்தனைப்புரட்சியும் நிகழ்வது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறான சிந்தனைப்புரட்சிகள் அந்தந்தக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவ்வகையில் கவிதைத்துறையில் ஏற்பட்ட ஒரு பரிணாமம் தான் புதுக்கவிதை. "நியூ போயட்ரி" (*New Poetry*) என்றும் "மாடர்ன் போயட்ரி"(*Modern Poetry*) என்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படும் கவிதையே தமிழில் புதுக்கவிதை எனப்படுகிறது (ராஜம் ராஜேந்திரன், 2007).

புதுக்கவிதை முதன்முதலில் மேலை நாடுகளில் தான் எழுதப்பட்டு வந்தது. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு பிராஞ்சு அகாடமி (*French Academy*) பிராஞ்சு மொழியில் புதுக்கவிதை இயற்றுவதற்கான சில விதிமுறைகளை விதித்தது. இச்செயலானது பல எழுத்தாளர்கள் மத்தியில் புதுக்கவிதை இயற்றும் திறனை முடக்கியது. இதனால், பிராஞ்சு எழுத்தாளர்கள் உரைநடை எழுதுவதில் ஆர்வத்தைக் காட்டினர். இதிலிருந்துதான் புதுக்கவிதை வளர்ச்சியடையத் தொடங்கியது.

05-4506832 ptbupsi

மேனாட்டு இலக்கியப் புரட்சிகளின் தாக்கத்திற்கும் சிந்தனை வளர்ச்சியின் வேகத்திற்கும் யாப்பு வடிவம் ஈடு கொடுக்க முடியாமல் போனது. ஆகவே கவிதைத்தன்மை நிறைந்த உரைநடை (*Poetic prose*) யில் தொடங்கி, வசன கவிதையாக (*prose poem*) மாறிப் பின்னரே புதுக்கவிதை (*Verse libre*) அங்கு மலர்ந்தது. மரபிலிருந்து மாறுப்பட்டதே புதிது எனப்படுகின்றது. பாரதியாரும் யாப்பு வடிவத்தைத் துறந்து மாறுபடும் கவிதையே புதுக்கவிதை என்கிறார். அதனைக் கீழ்க்கண்டவாறு மாகாகவி பாரதியார் விளக்குகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை"

(வல்லிக்கண்ணன், 1999:1)

இருபதாம் நூற்றாண்டில் அதிகமாகக் காணப்படுவது இந்தப் புதுக்கவிதைகள் தான். இப்புதுக்கவிதைகள் மலேசியாவிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இலக்கண வரம்பு இல்லையென்பதனால் பலரும் இப்புதுக்கவிதையினை ஆர்வமுடன் எழுதியும் எழுதிக் கொண்டும் இருக்கின்றனர்.

1910ஆம் ஆண்டில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் கவிதை எழுதுவதற்கான விதிமுறைகளை எதிர்த்து ஆங்கில இலக்கியப் படைப்புகளைப் படைத்தன. அமெரிக்கா கவிதையாளர் வால்ட் விட்மின் (Walt Whitman) அவர்கள் ஆங்கிலத்தில் கட்டற்ற கவிதை (Verse Libre) எனும் முறையை அறிமுகம் செய்தார். அவர் *புல்லின் இதழ்கள்* எனும் புதுக்கவிதைத் தொகுப்பினை 1855இல் வெளியிட்டார். இத்தொகுப்பானது புதுக்கவிதை உலகத்திலுள்ள அனைத்துக் கவிதையாளர்களுக்கும் தமிழ்க் கவிதையாளர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது. வால்ட் விட்மின் (Walt Whitman) முயற்சியை ஏஸ்ரா பவ்ன் (Ezra Bound), திண்டொன்(Tindon), தி.எஸ் இலியட் (T.S. Eliot) ஆகியோர் பின்பற்றினர். ஏஸ்ரா பவ்ன் (Ezra Bound) மற்றும் திண்டொன் (Tindon) ஆகிய இருவரும் ஒன்றிணைந்து புதுக்கவிதை எழுதுவதற்கான சில கோட்பாடுகளை உருவாக்கினர். தி.எஸ் இலியட் (T.S. Eliot) எழுதிய *பயனில்லா நிலம் (The Waste Land)* என்ற படைப்புச் சிறந்த கவிதை எனும் பரிசை வென்றது (வரதராசன், மு. 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi